***கவனிக்க.***-*2016.11.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I *: தொகுதி* (II*அ*) *மற்றும் பகுதி* IV(*அ*) *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**1996 - 2016 දෙසැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2016.12.02**

*1996 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| *சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்* | - |
| *சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்* | *1440* |
| *அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்* | - |
| *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்* | - |
| *நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்* | - |
| *மற்றைய நியமனங்களும் பிறவும்* | - |
| *பதிவாளர் நியமனங்களும் பிறவும்* | - |
| *அரசாங்க அறிவித்தல்கள்* | *1443* |
| *விலைக் கட்டளைகள்* | - |
| *இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்* | - |
| *இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்* | - |
| *வரவு செலவுத் திரட்டுக்கள்* | - |
| *அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்* | *1445* |
| *மாலுமிகளுக்கு அறிவித்தல்கள்* | - |
| *மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்* | - |


***கவனிக்க.***- (i) *இலங்கை சர்வதேச நேச்சர் லவிங் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *நாட்டில் சுற்றாடல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *வாழ்வின் எழுச்சி (திருத்தம்) சட்டமூலம் 2016, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2016 இன் இல. 1347*

எம்ஓடி/டீஎஃப்/02/01/ ஆர்ஈரீ/1056.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல் மற்றும் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றுதல்

### பதவி நிரந்தரமாக்குதல்

கீழ்க் காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தரை 2016, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதியிலிருந்து மேஜர் ஜெனரல் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் ஜெனரல் ஜகத் சந்திரலால் பள்ளியகே பக்ஷவீர, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, (உ/60078)

### இளைப்பாறுதல்

கீழ்க் காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2016, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட் டுள்ளது:-

மேஜர் ஜெனரல் ஜகத் சந்திரலால் பள்ளியகே பக்ஷவீர, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, (உ/60078)

### நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றுதல்

கீழ்க் காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தரை 2016, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதியிலிருந்துஇலங்கைத் தரைப் படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஜெனரல் ஜகத் சந்திரலால் பள்ளியகே பக்ஷவீர, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, (உ/60078)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, பெப்புருவரி 03.

12-54

*2016 இன் இல. 1348*

எம்ஓடீ/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/572.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்ட பதவி நிரந்தரமாக்குதல் மற்றும் இளைப்பாறுதல்

### பதவி நிரந்தரமாக்குதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தரை 2014, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட் டுள்ளது:-

தற்காலிக மேஜர் திலந்த சமிந்த அல்கம, ஆர்எஸ்பீ, இல.இமபபி (உ/65521)

### இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2014, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் திலந்த சமிந்த அல்கம, ஆர்எஸ்பீ, இல.இமபபி (உ/65521)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, மாச்சு 14.

12-53

---

*2016 இன் இல. 1349*

எம்ஓடீ/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/568.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்ட பதவி நிரந்தரமாக்குதல் மற்றும் இளைப்பாறுதல்

### பதவி நிரந்தரமாக்குதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தரை 2014, மே மாதம் 31 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல்

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் ஷாப்பிரிய மகேந்திரநாத் குமார சுரவீர ஆரச்சிகே, ஆர்எஸ்பீ, கெபபி (உ/62701)

**இளைப்பாறுதல்**

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2014, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஷாப்பிரிய மகேந்திரநாத் குமார சுரவீர ஆரச்சிகே, ஆர்எஸ்பீ, கெபபி (உ/62701)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, மாச்சு 14.

12-178

---

2016 இன் இல. 1350

எம்ஓட/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎம்/855.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல் மற்றும்
மருத்துவக் காரண அடிப்படையில் இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவி நிலையில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட் டுள்ளது:-

தற்காலிக மேஜர் எல்லல ஹேவகே தொன் சிசில் சந்திம ஹேவகே, ஆர்எஸ்பி, இகாப (உ/65457)

**இளைப்பாறுதல்**

கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் 2015, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து மருத்துவக் காரணிகளின் அடிப்படையில் இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் எல்லல ஹேவகே தொன் சிசில் சந்திம ஹேவகே, ஆர்எஸ்பி, இகாப (உ/65457)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, யூன் 26.

12-52

---

2016 இன் இல. 1351

எம்ஓட/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/1071.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல் மற்றும்
மருத்துவக் காரணிகள் மீது இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

கீழ்க் காணும் பெயருடைய உத்தியோகத்தரை 2015, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட் டுள்ளது:-

தற்காலிக மேஜர் தொன் மொஹான் தூலத் தினேஷ் மாதவ வலாக்குலுகே, ஆர்எஸ்பீ, கபபி (உ/66006)

**இளைப்பாறுதல்**

கீழ்க் காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2015, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து மருத்துவக் காரணிகள் காரணமாக இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் தொன் மொஹான் தூலத் தினேஷ் மாதவ வலாக்குலுகே, ஆர்எஸ்பீ, கபபி (உ/66006)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 15.

12-57

*2016 இன் இல. 1352*

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/920.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழே பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் 2015, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி தொடக்கம் இலங்கைத் தரைப்படை நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்டன் ஹங்கிலி கெதர நிஹால் ஆனந்த, இஇயுப (உ/64144)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, ஓகத்து 25.

12-55

---

*2016 இன் இல. 1353*

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/830.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழே பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் 2015, மே மாதம் 19 ஆந் திகதி தொடக்கம் இலங்கைத் தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் (உபகரண கட்டுப்பாட்டாளர்) சியம்பலாகஹ கெதர நிஹால் விக்ரமசிங்க, இசிப (உ/69230)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, மே 07.

12-56

*2016 இன் இல.1354*

எம்ஓடீ/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/1072/A.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து
இராஜினாமாச் செய்தல்

கீழ்க் காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2016, மாச்சு மாதம் 05 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் ஜாலத் தந்திரிகே சமித் அசங்க தந்திரிகே, கெபபி (உ/68924)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டி ஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, மாச்சு 18.

12-177

---

*2016 இன் இல. 1355*

எம்ஓடி/டீஈஎப்/03/02/ஆர்என்எப்/சீஓஎம்/I.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக நியமித்தல்

2016, யூலை மாதம் 30 ஆந் திகதியிலிருந்து வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் தரத்திற்கு :

1. பதில் உப லெப்டினன்ட் (பநிசவ்) சூரிய விஜேகோன் குணவத் முதியன்செலாகே சமந்த விஜேகோன், என்ஆர்டப் 3915, இகப
2. பதில் உப லெப்டினன்ட் (பநிசவ்) செலன் ஆரச்சிகே அஜித் பதிரன, என்ஆர்டப் 3916, இகப
3. பதில் உப லெப்டினன்ட் (நெகா) பிடிகல ஆரச்சிலாகே சமன் குமார, என்ஆர்எச் 3917, இகப
4. பதில் உப லெப்டினன்ட் (பநிசவ்) மானிக்கம் பெடிகே திலக் உபுல் குமார, என்ஆர்டப் 3918, இகப

5. பதில் உப லெப்டினனன்ட் (வி) மொரபிடியகே கசுன் லக்சித்த மொரபிடிய, என்ஆர்எல் 3919, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2016, ஒற்றோபர் 19.

12- 51

---

2016 இன் இல. 1356

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

2009, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியில் இருந்து செயல்வலுப் பெறும் வண்ணம் பின்வரும் பயிற்சிப் படை உத்தியோகத்தர்களை இலங்கை விமானப் படையின் பைலட் உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கும் அதே தேதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு சேவைக் கிளைகளுக்கு இடுகையிடுவதற்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அதிகாரபூர்வ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது :-

வெதயலாகெ மஞ்சுல கிரிஷாந்த வெதகெ (02793) மின்/பொறி
திஸாநாயக முதியன்சேலாகே லக்ஷ்மன் ஞானசிரி ஜயசேன (02794) மின்/பொறி
மீகஸ்வத்தே திஸாநாயக முதியன்சேலாகே ரவீந்ர உதய பண்டார திஸாநாயக (02795) மின்/பொறி
கதிரேசன் மோஹன சந்திரபிரகாஷ் (02796) மின்/பொறி

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2010, பெப்புருவரி 23.

12-179

---

# அரசாங்க அறிவித்தல்கள்

பதிவு செய்தல் ஆ 97 (F2) 2/64.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களை பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க இலங்கையின் பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றேன்.

| இலக்கம் | பதிவு செய்யப் பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1492 | 2016.11.01 | புனித அந்தோனியார் தேவாலயம் | ஓபாத்த மினுவங்கொடை. | வணக்கத்துக்குரிய பிதா ஸ்ரீயாநந்த பர்னாந்து | ரோமன் கத்தோலிக்கம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, நவெம்பர் 11.

12-59/1

பதிவு செய்தல் ஆ 96 (F2) 2/64.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*கட்டிடப் பதிவுச் சான்றிதழ்*

*சான்றிதழ் இல. 1492*

*விவாகப் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் வேண்டுகோள் மற்றும் பிரதிக்கினைக்கிணங்க பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த தேவாலயமாக உபயோகிக்கப்படும் கீழ் விபரிக்கப்படும் கட்டிடம் விவாகத்தினை நிகழ்த்துவதற்காக ஒழுங்கு முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

| விபரம் | அமைவிடம் கிராமம் அல்லது வீதி மற்றும் நகர பிரிவு | அமைவிடம் பற்று,கோறளை அல்லது மாவட்டத் தின் வேறு பிரிவு | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| புனித அந்தோனியார் தேவாலயம் | ஓபாத்த மினுவங்கொடை | வடக்கு அலுத்குரு கோறளை | கம்பஹா | வணக்கத்துக்குரிய பிதா ஶ்ரீயாநந்த பர்னாந்து | ரோமன் கத்தோலிக்கம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பத்தரமுல்லை,
*2016, நவெம்பர் 11.*

*12-59/2*

---

## பெரும்போக கூட்டறிக்கை - அம்பேவெல திட்டம் - 2016/2017

*வெலிமடை பிரதேச செயலகப் பிரிவின் அம்பேவெல திட்டத்தின் 2016/2017 க்கான பெரும் போகத்திற்கான கூட்டம் 2016.11.10 ஆந் திகதி அம்பேவெல நீர்ப்பாசன அலகு அலுவலகத்தில் நடைபெற்றதுடன் அதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:*

1 பயிரிடப்படும் நிலப்பரப்பு - 940 ஏக்கர்
2 பயிரின் வகை - நெல்/ களப்புப் பயிர்
3 கால்வாய் சுத்தம் செய்தல் - 2016.11.01 முதல் 20 ஆந் திகதி வரை
4 முதல் முறை நீர் விநியோகித்தல் - 2016.11.21
5 நிலத்தை பண்படுத்தி முடித்தல் - 2016.12.03
6 இரண்டாம் முறை கால்வாய் சுத்தம் செய்தல்- 2017.02.05
7 இறுதியாக நீர் விநியோகித்தல் - 2017.04.15
8 அறுவடை முடியும் திகதி - 2017.05.01
9 கால்வாய் சுத்தப்படுத்தாதவருக்கான தண்டப்பணம் - 10 மீற்றருக்கு 1000 ரூபா.
10 தேவையேற்படின் நீர்க் கட்டுப்பாட்டு முறை அமுல்படுத்தப்படும்.

பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை.

*12-122*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990 ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் 4 வது சிறப்பு சட்டத்தின்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட் தீர்மானம்.*

*துசிபேரேர லியனராலகே சமல் பிரியன்த - கடன் கணக்கு இலக்கம் 635790*

*கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 28.10.2016 ஆந் திகதி கூடிய கூட்டமொன்றில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.*

*கடன் எடுத்த துசிபேரேர லியனராலகே சமல் பிரியன்த கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. எம் .என். ராஜசூரிய 23.07.2010 ஆந் திகதியுடைய ஈடு முறி இலக்கம் 347 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறியின் பிரகாரம் 31.08.2016 ஆந் திகதி வரை ரூபா 4,761,442.43 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் 4 வது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி முறி இலக்கம் 347 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 4,761,442.43 வுடனும் 01.09.2016 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 4,062,509.59 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 13.50 சதவீத வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக, கொழும்பு - 12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2வது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

### அட்டவணை

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோரளையில் கட்டுவாவல் கிராமத்தில் உள்ள எட்டம்பகாவத்த காணிக்கு நில அளவையாளர் ஜே. டி. சில்வாவின் 1991.07.07 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1210 இல் காண்பிக்கப்பட்ட லொட் A இன் எல்லைகள் - வடக்கு : நிலஅளவையாளர் கே.ஆர்.பி. பெரேராவின் 1964.06.27 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 791 இல் காண்பிக்கப்பட்ட லொட் 11 மற்றும் 7; கிழக்கு : நில அளவையாளர் கே. ஆர். பி. பெரேராவின் 1994.06.27 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 791 இல் காண்பிக்கப்பட்ட லொட் 6 ; தெற்கு: லொட் E ; மேற்கு : மேற்சொல்லப்பட்ட வரைபடம் இலக்கம் 791 இல் காண்பிக்கப்பட்ட லொட் C மற்றும் B மற்றும் லொட் 11 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 16.58பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 1210. இக்காணி தெல்கந்த-நுகேகொடை காணிப் பதிவகத்தில் M 2892/220 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இக்கீழ் விபரிக்கப்பட்ட காணிகள் ஊடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்*

*1. மேற்படி கட்டுவாவல கிராமத்தில் உள்ள எட்டம்பகாவத்த காணிக்கு நிலஅளவையாளர் ஜே. டி. சில்வாவின் 1991.07.01 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1210 இல் காண்பிக்கப்பட்ட லொட் C யின் எல்லைகள் - வடக்கு: லொட் B ; கிழக்கு : லொட் A ; தெற்கு : லொட் E மற்றும் D ; மேற்கு : 10 அடி ரோட், இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 3.0பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 1210 இன்படி இக்காணி தெல்கந்த காணிப் பதிவகத்தில் M 1855/224 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*2. மேற்படி கட்டுவாவல கிராமத்தில் உள்ள எட்டம்பகாவத்த காணிக்கு நிலஅளவையாளர் கே. ஆர். பி. பெரேராவின் 1964.07.27 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 791 இல் காண்பிக்கப்பட்ட லொட் 15 (10 அடி ரோட்) எல்லைகள் - வடக்கு : ரோட் ; கிழக்கு : லொட் 2, 14, 13, 12, 11 மற்றும் 8 ; தெற்கு : லொட் 9 ; மேற்கு : லொட் 10 மற்றும் 11. இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 15.54பே. மேற்படி வரைபடம் இலக்கம் 1210 இன் படி இக்காணி தெல்கந்த-நுகேகொடை காணிப் பதிவகத்தில் M 1628/268 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*திருமதி ரஞ்சனி கமகே,*
*கம்பனிச் செயலாளர்.*

*12-108*

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*21.09.2016 இல் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-*

*"1.பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. ஐ. பீ. விஜயவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2013.06.24 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல.158 மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சீ. மத்தியு அத்தாட்சிப்படுத்திய 2011.04.08 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 5510 ஆகியவற்றின் பேரில் ரங்கன ஹோல்டிங் கம்பனி ஏக உரிமையாளர் பிலியந்தல, தும்போவில, பட்டியாவத்த வீதி, இல. 83/4 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அலெக்சாந்தர் வேர்க்ஸ் விபுல ரங்க குமார்*

என்பவரிடமிருந்து மேலதிகப்பற்று மீது 2016.08.08 ஆந் திகதி வரை முதலும் வட்டியும் எழுபத்தொன்பது இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்றி இருபத்து நான்கு ரூபா முப்பத்திரண்டு சதமும் (ரூ. 79,12,224.32) அத்துடன் அறுபது இலட்சம் ரூபாவில் (ரூ. 60,00,000) ஆண்டுக்கு பதின்நான்கு (14%) வீதத்தில் 09.08.2016 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் மற்றும் கடன் மீது 08.08.2016 வரை முதலும் வட்டியும் நாற்பத்து மூன்று இலட்சத்து பதினான்காயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா ஒன்பது சதமும் (ரூ. 43,14,913.09) அத்துடன் முப்பத்து நான்கு இலட்சத்து எழுநூற்றி முப்பத்தொன்பது ரூபா முப்பத்தைந்து சதமும் (ரூ. 34,00,739.35) ஆண்டுக்கு (13.5%) வீதத்தில் 2016.08.09 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

2. பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. ஐ. பீ. விஜயவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2013.06.24 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல.158 மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சாந்தனி மத்தியு அத்தாட்சிப்படுத்திய 2011.04.08 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 5510 ஆகியவற்றின் பேரில் மேலதிகப்பற்று மீது எழுபத்தொன்பது இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்றி இருபத்து நான்கு ரூபா முப்பத்திரண்டு சதமும் (ரூ. 79,12,224.32) மற்றும் கடன் மீது நாற்பத்து மூன்று இலட்சத்து பதினான்காயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா ஒன்பது சதமும் (ரூ. 43,14,913.09) அத்துடன் 2016.08.09 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விகார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் T & H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, பிரதான வீதி கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளை பல்லே பற்றுவில் கெஸ்பேவ பிரதேச செயலகப்பிரிவில் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் தும்போவில வடக்கு கிராம அலுவலர் பிரிவு இல. 576A இல் தும்போவிலயில் அமைந்த "மாரகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. ஆர். எஸ். பெரேரா தயாரித்த 2005.09.30 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2046 இல் விபரித்த துண்டு $A^{1a2}$ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரைபட இல. 1781 இல் துண்டுகள் $A^{1a1}$ , $A^{1a3}$ ம் மற்றும் $A^{1b}$ யும்; கிழக்கு : வரைபட இல.1781 இல் $A^{1b}$ மற்றும் வரைபட இல. 1852 இல் துண்டு A2 உம்; தெற்கு : வரைபட இல. 1852 இல் துண்டு A2 மற்றும் டபிள்யூ. டி. கரோலிஸ் என்பவரின் வாரிசுகளின் கஹட்டகஹவத்த தெனியவும்; மேற்கு : டபிள்யூ. டி. கரோலிஸ் என்பவரின் வாரிசுகளின் துண்டுகள் $A^{1a1}$ மற்றும் $A^{1a3}$ கஹட்டகஹவத்த தெனியவும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.2046 இன் படி ஆறு தசம் ஆறு எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 6.68பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெல்கந்த நுகேகொட காணிப்பதிவகத்தில் C16/21 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட தும்போவிலயில் அமைந்த "மாரகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. ஆர். எஸ். பெரேரா தயாரித்த 2005.09.30 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2046 இல் விபரித்த துண்டு $A^{1a3}$ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : பட்டியவத்தை பாதையும் வரைபட இல. 1781 இல் துண்டு $A^{1b}$யும்; கிழக்கு : வரைபட இல.1781 இல் $A^{1b}$ மற்றும் துண்டு $A^{1a2}$ உம்; தெற்கு : துண்டு $A^{1a2}$ மற்றும் $A^{1a1}$ உம்; மேற்கு : துண்டு $A^{1a1}$ மற்றும் பட்டியவத்த பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.2046 இன் படி ஒன்று தசம் எட்டு இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 1.82பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெல்கந்த நுகேகொட காணிப்பதிவகத்தில் C16/22 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திருமதி எச். எஸ். எம். எம். பீ. ஹேரத்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பிரதான வீதி கிளை.

12-200

---

### நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2016.09.26 ஆந் திகதி

அன்றுள்ளவாறு கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

தஹநாயக லியனகே நிஹால் சமன்

''பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய தஹநாயக லியனகே நிஹால் சமன் பிரசித்த நொத்தாரிசு டிலுமினி வீரக்கொடியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, தை 02 ஆந் திகதிய 2421 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டு முறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் தஹநாயக லியனகே நிஹால் சமனினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்,

மற்றும் குறிப்பிட்ட தஹநாயக லியனகே நிஹால் சமன் குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் 2016.07.21 ஆந் திகதியன்று தவணைக் கடன் வசதியின் நிலுவைத் தொகையாகவுள்ள அறுபத்தைந்து இலட்சத்து இருபத்துமூவாயிரத்து இருநூற்று பதின்நான்கு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 65,23,214.39) தொகையையும் 2016.07.21 ஆந் திகதியன்று மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள அறுபது இலட்சத்து இருபதாயிரத்து ஐநூற்று இருபத்தாறு ரூபா இரண்டு சதம் (ரூ. 60,20,526.02) தொகை மீது இணங்கப்பட்டபடி 2016.07.22 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்ட தீர்வைகள், விளம்பரச் செலவுகளையும் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை கொழும்பு திரிவாங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் அமைப்பைச் சேர்ந்த திரு. திரிவாங்க சீ. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப் பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

